மிஹிந்தலை பிரதேச சபை
அநுராதபுரம் மாவட்டம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 மார்ச் மாதம் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

## 1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மிஹிந்தலை பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.
.

1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிதிக்கூற்றுகளை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒப்பீட்டு கணக்குகளை சமர்ப்பித்த போது முந்தைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,560,205 பெறுமதியான தொகையாக இருந்த போதிலும் அது ரூபா 12,730,178 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ரூபா 3,161,025 தொகை பெறுமதியான நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டண வருமானம், நன்கொடை | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| | பணம், அங்கத்துவப்பணம் மற்றும் உதவித் தொகைகள் செலவு மீதிகளின் கீழ் செலவுகளாக காண்பிக்கப்பட்டிருந்தன. | | |
| (ii) | மீளாய்வாண்டிற்கு உரிய கடை வாடகை வருமானம் ரூபா 2,500,800 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுகளில் ரூபா 1,428,400 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 1,072,400 குறைவாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (iii) | மீளாய்வாண்டின் விலைமனுக்கோரல் சொத்துக்களை குத்தகைக்குக் கொடுத்தல் பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 1,309,250 பெறுமதியான தொகையாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுகளில் ரூபா 1,751,006 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 441,756 பெறுமதியான தொகை அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (iv) | 2020 ஆம் ஆண்டிற்குரிய விலைமனுக் கோரல் குத்தகைக்கு வழங்குதல் தொடர்பாக மீளாய்வாண்டில் கிடைக்கப் பெற்ற ரூபா 1,042,985 பெறுமதியான தொகை பொறுப்புகளாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (v) | மீளாய்வாண்டிற்கு உரிய ரூபா 344,225 தொகை பெறுமதியான விளம்பரப் பதாகைகள் வருமானம் நிதிக்கூற்றுகளில் ரூபா 373,025 தொகை பெறுமதியானதாக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 28,800 பெறுமதியான தொகை அதிகமாக கணக்கிடப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலுவையிலிருந்த விளம்பரப் பதாகைகள் வருமானம் ரூபா 356,000 பெறுமதியான தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (vi) | மீளாய்வாண்டில் கழிவு கட்டண பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா 948,847 பெறுமதியான தொகையாக இருந்த போதிலும் நிதிக் கூற்றுகளில் ரூபா 1,677,541 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 728,694 பெறுமதியான தொகை அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (vii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி 83 செயற்திட்டங்களுக்காக கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய நிர்மாணத்தொழில் கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 19,870,227 பெறுமதியான தொகை மூலதன வருமானம் மற்றும் செலவினங்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (viii) | வாரச் சந்தை நிர்மாணிப்பதற்காக பிணை உறுதிப் பணம் ரூபா 1,138,441 பெறுமதியான தொகையை விடுவித்திருந்த போதிலும் அந்தக் கொடுப்பனவு பெறுமதியை வங்கிக் கணக்கு மீதியில் மாத்திரம் குறைத்து நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (ix) | நானாவித கடன்கொடுத்தோர் கணக்கின் முன்னைய ஆண்டின் கடன்கொடுத்தோர் கொடுப்பனவுகள் ரூபா 90,091 பெறுமதியான தொகை மீளாய்வாண்டில் செலவாக காண்பிக்கப்பட்டிருந்ததோடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 78,806 பெறுமதியான தொகை மீளாய்வாண்டின் செலவாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (x) | மீளாய்வாண்டின் நிர்மாண வேலைகளுக்கான கொடுப்பனவுகளுக்காக பொதுக் கணக்கில் இருந்து, தொழில் கணக்குக்கு பணப் பரிமாற்றம் ரூபா 1,074,625 பெறுமதியான தொகை வேறு வருமானங்கள் ஆகவும் பணத் தீர்வுகள் ரூபா 656,625 பெறுமதியான தொகை பொது நிர்வாக செலவுகளாக காண்பிக்கப்பட்டிருந்தன. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (xi) | பிணை வைப்பு மற்றும் பொது வைப்புகளுக்காக கிடைக்கப் பெற்ற ரூபா 370,025 பெறுமதியான தொகை பொறுப்புகளாக காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக ஆண்டு வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |
| (xii) | திசெம்பர் மாத சுகாதார சேவை ஊதியம் மற்றும் கூலிகளுக்கான மொத்த செலவு ரூபா 387,627 பெறுமதியான தொகை நிதிக்கூற்றுகளில் ரூபா 578,609 பெறுமதியான தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 190,982 பெறுமதியான தொகை அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (xiii) | கம்பெரலிய செயற்திட்டத்துக்காக மிஹிந்தலை பிரதேச செயலகத்தினால் கிடைக்க வேண்டிய நிர்வாகச் செலவு ரூபா 521,950 பெறுமதியான தொகை நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படாமல் இருந்ததோடு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மற்றும் முத்திரை வரி ஆகிய ரூபா 105,539 பெறுமதியான தொகை ஒட்டுமொத்த நிதிக்கு இணைக்கஞ் செய்யப்பட்டிருந்தன. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன் |

**(இ) கணக்காய்வுக்குத் தேவையான எழுத்து மூலமான சான்றுகள் காணப்படாமை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 143,826,950 பெறுமதியான 09 கணக்குகளுக்கு உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் ரூபா 82,212,276 பெறுமதியான வருமான விடயங்கள் 18 மற்றும் ரூபா 87,892,734 பெறுமதியான செலவு விடயங்கள் 09 ஆகியவை பிரதான பேரேட்டின் கணக்குக்கு மாற்றப்பட்டதன் நாளாந்த ஜெர்னல் குறிப்புகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நாட் குறிப்புகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (iii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 5,812,837 தொகை பெறுமதியான வருமான விடயங்கள் 09 இற்கு உரிய ஆண்டு வருமான ஆவணங்கள் மற்றும் வருமானம் கிடைத்ததற்கான உப ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | வருமான ஆவணங்களும் அடடவணைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அனைத்து ஆவணங்களும் புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு தவறுதலாக ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாமல் போயுள்ளது. |

## 1.4 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. | | | |
| (அ) | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் கையேடு | | | | |
| | (i) விதி 161 | | பீ.எஸ் 17 வடிவம் பிரகாரம் வருமான செலவுக் கணக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதி விதியன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| | (ii) விதி 217 மற்றும் 218 | | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக பீ.எஸ்.46 வடிவம் பிரகாரம் பதிவேடொன்று பேணப்படாமல் இருந்ததுடன் சகல காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு ஆண்டும் பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. | விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | மோட்டார் வாகன சட்டம் 203 ஆம் அதிகாரம் | - | சபைக்குரிய உழவு இயந்திரம் ஒன்று, டேலர் ஒன்று, கர உழவு இயந்திரம் ஒன்று மற்றும் தண்ணீர் பவுசர்கள் இரண்டு ஆகியவை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும்போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2008 இலக்கம் 13 உடைய மாடறுப்பு (திருத்தப்பட்டது) சட்டம் - 272 ஆம் அதிகாரத்தின் 18 ஆம் பிரிவு | - | கட்டுகெலியாவ பிரதேசத்தில் தனியார் இடமொன்றில் நடத்தப்பட்டு வரும் உரிய மாடறுக்கும் இடத்திற்கான | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த சொத்துகளை சபைக்குப் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளமையால் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | | குத்தகைக்கு விட முடியாமல் உள்ளது. |
| (ஈ) | வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை<br>----------------------- | | | | | |
| | 2002 ஜூலை 24 ஆம் திகதியிட்ட இலக்கம் 20/2002 மற்றும் 2015 ஜனவரி 13 ஆம் திகதிய 20/2002(i) சுற்றறிக்கை | 39,525 | (i) | காணிகளைத் துண்டு பிரித்தல், வீதி ரேகைகள், கட்டிடத் திட்டங்கள் ஆகியவற்றுக்காக அறவிடப்படும் பரிசோதனைக் கட்டணத்தில் வழங்கப்படக் கூடிய கொடுப்பனவு 50% ஆன போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட மொத்த பரிசோதனைக் கட்டணமும் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபையின் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருவதோடு 2019.10.29 ஆம் திகதியில் இருந்து 2002.07.24 திகதியிட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் இல 20/2002 உடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத் தருகிறேன். |
| | | 39,705 | (ii) | களப் பரிசோதனைகளில் கலந்து கொள்ளும் அதிகாரிகளுக்கு மாத்திரம் உரிய கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனினும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் அவற்றில் கலந்து கொள்ளாத தரப்பினருக்கும் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | சபையின் தீர்மானங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறியத் தருவதோடு 2019.10.29 ஆம் திகதியில் இருந்து 2002.07.24 திகதிய உள்ளூராட்சித் திணைக்களத்தின் 20/2002 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதை அறியத் தருகிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 2,650,387 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவீனம் ரூபா 2,560,205 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 948,500 | 1,177,050 | 1,177,050 | - | 968,750 | 1,191,830 | 983,210 | 480,820 |
| (ii) | வாடகை | 12,201,430 | 9,070,591 | 7,538,474 | 2,444,991 | 10,351,048 | 11,157,048 | 10,866,816 | 912,877 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 3,492,500 | 3,928,766 | 3,928,776 | - | 3,783,552 | 17,506,500 | 17,506,500 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 2,068,000 | 3,666,708 | - | 8,677,405 | 1,789,800 | 1,325,166 | 5,595,844 | 5,010,697 |
| | | 18,710,430 | 17,843,115 | 12,644,300 | 11,122,396 | 16,893,150 | 31,180,544 | 34,952,370 | 6,404,394 |

#### 2.2.2 வீத வரிகள் மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 134(i) ஆம் பிரிவின் பிரகாரம் சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசத்தினுள் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக பிரகடணப்படுத்தி வீதவரியை அறவிடப்படவில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசமாக வர்த்தமானியில் பிரசுரித்து வீதவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை | தற்போது வீதவரி எல்லைகள் இனங்காணப்பட்டு பொதுச் சபைக்கு சமர்ப்பித்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்குரிய நியதிகளைத் தயாரித்து உள்ளூராட்சி |

| | | |
|---|---|---|
| | மேற்கொள்ளப்பட வேண்டும். | மன்றத் திணைக்களததிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கைக்கு இணங்க 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை கடைகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் எனினும் 2009 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு 41 கடைகளின் வாடகைகள் அறவிடப்பட்டுக் கொண்டிருந்தன. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பெற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் மூலமாக வழங்கப்பட்டிருந்த மாதாந்த வாடகை மதிப்பீட்டுத் தொகையை அறவிடுவது தொடர்பாக கடைகளின் குத்தகைதாரர்களுக்கு அறியத் தந்த வேளையில் அந்தத் தொகையைச் செலுத்த குத்தகைதாரர் மறுத்து விட்டார்கள். |
| (ஆ) | 2019 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி 36 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை வாடகைகளின் பெறுமதி ரூபா 1,277,156 தொகையாக காணப்பட்டது. | நிலுவை வாடகைகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த நிலுவை வாடகைத் தொகையை அறவிடுவதற்காக கௌரவ மாவட்ட நீதிமன்றத்தை நாடி புகார் அளிக்கவும் வெளியேற்றும் உத்தரவைப் பெற்றுக் கொள்ளவும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 பிரதேச சபை (நிதி நிர்வாகம்) விதி 59 - 66 வரையான விதிகளின் அடிப்படையில் வியாபார அனுமதிப்பத்திரம், கைத்தொழில் வரி, தொழில்துறை வரி என்பவற்றை அறவிட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பில் ஆய்வொன்று நடத்தப்பட்டிருக்கவில்லை. | விதி பிரகாரம் ஆய்வொன்று நடத்தி கட்டணம் அறவிடப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

### 2.2.5 ஏனைய வருமானங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் இருந்து 2019 ஆம் ஆண்டு வரையான ஆண்டுகளுக்கு உரிய முத்திரைக் கட்டணங்களை தலைமை செயலாளரிடம் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017, 2018 ஆம் ஆண்டுகளுக்கு கிடைக்க வேண்டியதாக இனங்காணப்பட்ட ரூபா 2,821,534 பெறுமதியான தொகை உள்ளிட்ட ரூபா 4,434,484 பெறுமதியான தொகை முத்திரைக் கட்டணமாக 2020.03.12 ஆம் திகதி சபைக்கு கிடைத்திருந்தது. 2019 ஆம் ஆண்டுக்கான முத்திரைக் கட்டணங்களைக் கணக்கிடு வதற்காக இதுவரையில் காணி ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து அழைப்பு கிடைக்கப் பெறவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28 ஐ நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை உரிய விடயங்கள் தொடர்பாக துணை விதிகள் விதிக்கப்பட்டிருக்க வில்லை. | துணை விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த அனைத்து விடயங்களுக்கும் துணை விதிகள் விதிக்கப்படவில்லை. அனுமதிக்கப்பட்ட துணை விதிகளைக் கொண்டு அவற்றுக்கிணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது துணை விதிகள் வழங்கும் செயற்குழுவொன்றை நியமித்து அதற்கிணங்க வருங்காலத்தில் தேவையான துணை விதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) கைவிடப்பட்ட பணிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் அனுமதி அளிக்கப்பட்ட ரூபா 6,970,000 பெறுமதி மதிப்பிடப்பட்ட 06 பணிகள் ஆண்டுக்குள் மேற்கொள்ளப்படாமல் கை விடப்பட்டிருந்தன. | ஆண்டில் அனுமதி பெறப்பட்ட செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் தடையற்ற திட்டமாக இதை செயல்படுத்துவேன். |

**(இ) பணிகளைப் பூர்த்தி செய்வதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 2,405,145 பெறுமதியான தொகைக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்படாத பணிகள் 03 ஐ நிறைவேற்றுவது தாமதமாகியிருப்பது அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்த காலத்துக்குள் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். உரிய ஒப்பந்ததாரருக்கு அறியத் தரப்பட்டுள்ளது. |

**(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான வழிமுறையொன்று இல்லாத காரணத்தால் சேகரிக்கப்படும் குப்பை கூளங்கள் வகை படுத்தப்படாமல் திறந்த வெளியில் புதைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. | கழிவு முகாமைத்துவத்தை முறையாக செய்யத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | பிரதேச செயலகத்தினால் இடமொன்றை ஒதுக்கித் தந்ததன் பிறகு மத்திய சுற்றாடல் அதிகார சபை, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சுடன் இணைந்து முறையான செயற்திட்ட மொன்றைத் தொடங்கவும், அதன் மூலமாக முறையான கழிவு முகாமைத்துவத்தைச் செய்யவும் எதிர்பார்த்துள்ளேன். |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபையினால் திட்டவட்டமான செயற்பாடுகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்றவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | இதற்காக முறையாக விளக்கம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் சபை பதவியணியினரில் இல்லை. அதனால், ஒரு உத்தியோகத்தருக்கு அது தொடர்பான விளக்கத்தை வழங்கி எதிர்வரும் செயற்பாடுகளை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளி வேலைகளுக்காக சபையின் இயந்திரங்கள் மற்றும் கழிவு பவுசரைப் பயன்படுத்தியதால் அறவிடப்பட வேண்டிய ரூபா 202,000 பெறுமதியான தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | இயந்திரங்கள் மற்றும் கழிவு பவுசரை வாடகை அடிப்படையில் வழங்கும் முன்பு கட்டணத்தை அறவிடும் வழிமுறை யொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தலைவர் / உப தலைவர் மற்றும் உறுப்பினர்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இயந்திரங்கள் அந்த வேலைகளில் பயன்படுத்தப்பட்டன. |
| (ஆ) | நூலகம் மற்றும் கேட்போர் கூடத்தை நிர்மாணிப் பதற்காக தேசிய கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திடமிருந்து 2011 ஆம் ஆண்டில் ரூபா 11,156,365 பெறுமதியான தொகை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் உரிய கேட்போர் கூடம் நிர்மாணிக்கப் பட்டிருக்கவில்லை. | கடன் தொகை பெறப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட வேண்டும். | இந்த நிர்மாணம் வெகுகாலத்திற்கு முன்பு உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்போடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், அந்தக் கட்டிடத்தில் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை. தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்தில் பொது மக்கள் நூலகம், களஞ்சியசாலை மற்றும் அலுவலகம் வேறு வேலைகளுக்காக |

| | | |
|---|---|---|
| | | பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேல்மாடியில் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ரூபா 1,283,500 தொகை பெறுமதியான மோட்டார் சைக்கிள் ஒன்று, இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்று, கல் ரோலர் ஒன்று மற்றும் டபல் கெப் வாகனம் ஒன்று ஆகியவை 5 ஆண்டு காலமாக செயலற்றுக் காணப்பட்டன. | சொத்துகளைப் பழுதுபார்த்து உபயோகப்படுத்த அல்லது அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 147 - 7729 மோட்டார் சைக்கிளை ஏலவிற்பனைக்கு முன் வைக்கப்பட்ட போதுஎவரும் வாங்காததோடு, 53 - 5046 கெப் வாகனம் உபயோகப்படுத்த முடியாத அளவுக்கு சேதமடைந்திருந்தது. சிறிய கல் ரோலர் மற்றும் இரண்டு சக்கர உழவு இயந்திரத்தை கிடைக்கப் பெற்றுள்ள நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களைக் கொண்டு பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.3.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1980 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 40 கடைகளைப் புதுப்பிக்கவோ மீண்டும் பாவனைக்கு எடுக்கக் கூடிய விதத்துக்கு மாற்றவோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிய சொத்துக்களைப் புதுப்பித்து வருமானம் ஈட்ட பயன்படுத்த வேண்டும். | இந்தக் கடைகளின் மாதாந்த கடை வாடகைத் தொகையை வழங்குதல் ஐக்கிய வியாபார சங்கத்தின் அறிவுறுத்தல் பிரகாரம் குத்தகைதாரர்களால் 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் இந்தக் கடைகளின் சிதைவுகள் மற்றும் கடைகளின் உரிமையைக் கோரி கௌரவ மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தமை ஆகியவை ஆகும். இந்த நிலுவை கடை வாடகைத் தொகையை அறவிட கௌரவ மாவட்ட நீதிமன்றத்திடம் விடய அறிக்கையை |

| | | சமர்ப்பித்து வெளியேற்றும் உத்தரவைப் பெற தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |
|---|---|---|

3.3.3 **கையேற்கப்படாத சொத்துக்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ரூபா 126,000 தொகை பெறுமதியுள்ள கட்டுகெலியாவ மாடறுக்கும் இடம் அமைந்திருக்கும் காணியை சபைக்கு கையேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையகப்படுத்துவதை உடனடியாகச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்தக் காணியை கையேற்பதற்காக ஆண்டுக் கணக்கில் மிஹிந்தலை பிரதேச செயலகத்துடன் கடிதப் பரிமாற்றம் நடைபெற்றுள்ள போதிலும், சபைக்கு காணியை வழங்க இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |